# நமது மக்களில் முதலீடு செய்தல்



## பணியிடைக்காலத் திறன் மறுபயிற்சி



- 40 வயதுக்கும் மேற்பட்ட சிங்கப்பூரர்களுக்கு **ஸ்கில்ஸ்ஃபியூச்சர் திறன் மேம்பாட்டுத் திட்டம்**
  - மே 2024இல், **$4,000 ஸ்கில்ஸ்ஃபியூச்சர் (பணியிடைக்கால) பயிற்சி உதவி நிரப்புத்தொகை**; சிறந்த வேலைவாய்ப்புகளைக் கொண்டுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்துறை சார்ந்த பயிற்சி வகுப்புகளுக்குப் பயன்படுத்தலாம்
  - அரசாங்க நிதியாதரவு பெற்றுள்ள மற்றொரு முழுநேரப் பட்டயக் கல்விக்கு **மேம்படுத்தப்பட்ட பணியிடைக்கால நிதியுதவி**
  - தேர்ந்தெடுக்கப்பட்ட முழுநேர வகுப்புகளுக்கு, 24 மாதம் வரை, **$3,000 வரையிலான மாதாந்தர ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பணியிடைக்கால பயிற்சிப் படித்தொகை**

## குறைந்த வருமான ஊழியர்கள்

- ஜனவரி 2025 முதல் **வேலைநலன் துணை வருமானத் திட்ட** வழங்குதொகைகள், ஆண்டுக்கு **$4,900** வரை உயர்த்தப்படும்; தகுதிபெறும் வருமான உச்ச வரம்பு **$3,000க்கு** உயர்த்தப்படும்
- ஜூலை 2024 முதல் **தகுதிபெறும் உள்ளூர் சம்பளம் $1,600க்கு** உயர்த்தப்படும்
- **படிப்படியாக உயரும் சம்பள உதவித்தொகைத் திட்டத்திற்கான** இணை நிதி, இவ்வாண்டு அதிகபட்சம் **50%** ஆக உயர்த்தப்படும்; 2025இல் அதற்கான சம்பள உச்ச வரம்பு **$3,000க்கு** உயர்த்தப்படும்

## தொழில்நுட்பக் கல்விக் கழகப் பட்டதாரிகள்

- பட்டயக் கல்வித் தகுதியைப் பெற விரும்பும் இளம் தொழில்நுட்பக் கல்விக் கழகப் பட்டதாரிகளுக்குத் **தொழில்நுட்பக் கல்விக் கழக முன்னேற்ற விருது**
  - பலதுறைத் தொழிற்கல்லூரியில் சேர்ந்தவுடன், உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கணக்கில் **$5,000** தொகை நிரப்பப்படும்
  - பட்டயக் கல்வியின் நிறைவில், மத்திய சேமநிதி சாதாரணக் கணக்கில் **$10,000** தொகை நிரப்பப்படும்



go.gov.sg/2024b

மேல்விவரங்களுக்கு
www.singaporebudget.gov.sg

BUDGET 2024

MOF MINISTRY OF FINANCE SINGAPORE

16 பிப்ரவரி 2024 நிலவரப்படி